அ2 / 11778 / 2008

# சேலம் மாநகராட்சி

## அறிவிப்பு

தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண். 249, நாள் 28-12-98 மற்றும் தொழில்வரி திருத்தச்சட்டம் 59 / 1998, நாள் 26-12-98-ன்படி சேலம் மாநகராட்சியில் கீழ்க்கண்ட பட்டியலின் கலம் எண் 3-ல் கண்டுள்ளவாறு நுண்ணறிவுத்திறத் தொழில்கள், மரபுத் தொழில்கள், மற்றும் பணித்தொழில்கள் ஆகியவைகளுக்கு 01-10-2003 முதல் அரையாண்டு வரித்தொகை நிர்ணயித்து வசூலிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 12-01-1999-ந் தேதிய அரசாணை எண் 11, பக்கம் எண் 15, பத்தி எண் 16-ல் ஐந்தாண்டிற்கு ஒருமுறை மன்ற அனுமதியுடன் நடைமுறையிலுள்ள தொழில் வரியில் 25% முதல் 35% வரை கூடுதல் செய்து மாற்றியமைத்து திருத்தம் செய்து கொள்ளத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | அரையாண்டு தோராய வருவாய் | நடைமுறையிலுள்ள அரையாண்டு தொழில் வரி | 30% உயர்வு செய்து மாற்றி அமைக்கப்பட்ட தொழில் வரி |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | ரூ.21,000/- வரை | இல்லை | இல்லை |
| 2. | ரூ.21001 முதல் ரூ.30000 வரை | ரூ.78/- | ரூ.101/- |
| 3. | ரூ.30001 முதல் ரூ.45000 வரை | ரூ.195/- | ரூ.254/- |
| 4. | ரூ.45001 முதல் ரூ.60000 வரை | ரூ.390/- | ரூ.507/- |
| 5. | ரூ.60001 முதல் ரூ.75000 வரை | ரூ.585/- | ரூ.761/- |
| 6. | ரூ.75000 மற்றும் அதற்கு மேல் | ரூ.780/- | ரூ.1014/- |

அரசாணையில் தெரிவித்துள்ளபடி சேலம் மாநகராட்சி மாமன்றம் தனது 30-05-2008-ம் தேதிய தீர்மானம் எண். 60-ல் மேற்காணும் கலம் எண் 3-ல் கண்ட நடைமுறையிலிருந்து வரும் அரையாண்டு தொழில் வரியில் 30% கூடுதல் செய்து கலம் எண் 4-ல் கண்டுள்ளவாறு மாற்றியமைத்து நிர்ணயித்து 01-10-2008 முதல் வசூல் செய்ய அங்கீகரித்துள்ளது.

எனவே அரசாணைப்படி சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிகழும் நுண்ணறிவுத் திறத் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள் மற்றும் பணித்தொழில்கள் ஆகியவைகளுக்கு நடைமுறையிலுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மேற்கண்ட பட்டியலில் கண்ட அரையாண்டு வருவாயினுக்குத் தக்கவாறு நிறுவனம் மற்றும் பணியாளர்களுக்கான விவர அறிக்கையினை (Return) தயார் செய்து தொழில் வரியினை தொழில் புரியும் அந்தந்த வார்டு அலுவலகங்களில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளத் தெரிவிக்கப்படுகிறது.

மாநகராட்சி எல்லைக்குள் தொழில்புரியும் வணிக பெருமக்கள் மற்றும் இதர தொழில்கள் மேற்கொள்ளுவோர் தாங்களாகவே முன்வந்து மேற்குறிப்பிட்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு தொழில்வரியினை சம்பந்தப்பட்ட வார்டு அலுவலகங்களில் செலுத்தி மாநகராட்சியின் நடைமுறைக்கு சீரிய ஒத்துழைப்பினை நல்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சேலம்
12-06-2008

ஒம்/- **கே.எஸ்.பழனிசாமி**
ஆணையாளர், சேலம் மாநகராட்சி